பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**14 06 2026** **SUNDAY** **6 45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1.** பிரான்ஸ் சென்றடைந்த பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

**2.** வாகனங்களில் **100** சதவீத எத்தனால் எரிபொருளைப் பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

**3.** அரசு மருத்துவமனைகளை மேம்படுத்த மாநில அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

**4.** அனைத்து விதமான ஆவின் பால் வகைகளும் தட்டுப்பாடின்றி நுகர்வோருக்கு வழங்கப்பட்டு வருவதாக மாநில பால்வளத்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி கூறியுள்ளார்.

**5.** ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரான்ஸ் மற்றும் ஸ்லோவாக்கியாவில் மேற்கொள்ள உள்ள ஆறு நாள் அரசுமுறை பயணத்தின் முதல் கட்டமாக, பிரான்ஸ் நாட்டின் நீஸ் நகரை சென்றடைந்தார்.

அங்கு அவருக்கு இந்திய வம்சாவளியினர் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்பு அளித்தனர்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில், பிரான்ஸ் மற்றும் இந்தியா கலைஞர்கள் கதக், ஒடிசி மற்றும் பரதநாட்டியம் போன்ற இந்திய பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் பிரதமரை வரவேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த பயணத்தின் முக்கிய நிகழ்வாக, இன்று பிற்பகல் மணி **2.30-**க்கு, பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரான் மற்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் இணைந்து **Bharat Innovates** என்ற மூன்று நாள் நிகழ்ச்சியை தொடங்கி வைக்கின்றனர்.

இது இந்தியாவின் புத்தாக்கம் மற்றும் புத்தொழில்களுக்கான சூழலை உலக அரங்கில் முன்னிறுத்தும் ஒரு முக்கியத் திட்டமாகும்.

இதனைத் தொடர்ந்து, இரு தலைவர்களும் தொழில்நுட்பம், பாதுகாப்பு, புதுமை கண்டுபிடிப்பு மற்றும் உத்திசார் விவகாரங்கள் குறித்து இருதரப்பு பேச்சுக்களை நடத்த உள்ளனர்.

பிரான்ஸ் பயணத்திற்குப் பிறகு, பிரதமர் திரு. நரேந்திர மோடி தனது பயணத்தின் இரண்டாம் கட்டமாக ஸ்லோவாக்கியா செல்லவுள்ளார்.

அங்கு தனது பயணத்தை முடித்துக்கொண்டு, பிரான்சில் நடைபெறவுள்ள ஜி-7 நாடுகளின் உச்சி மாநாட்டிலும் பிரதமர் பங்கேற்க உள்ளார்.

முன்னதாக, பிரான்ஸ் நாட்டின் நீஸ் நகரில் தமக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்பிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்திய வம்சாவளியினருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த வரவேற்பு தமக்கு என்றும் நினைவில் நிற்கக்கூடியதாக அமைந்ததுள்ளதாக கூறியுள்ளார்.

தாயகத்திலிருந்து ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் இருந்தாலும், இந்திய வம்சாவளியினருக்கும் இந்தியாவிற்கும் இடையே உள்ள பிணைப்பு இப்போதும் மிகவும் வலுவாக நீடிக்கிறது என்பதை அவர் தனது பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

பெட்ரோல், டீசல் இறக்குமதியைக் குறைக்கும் விதமாக, 100 சதவீத எத்தனால் எரிபொருளைப் பயன்படுத்துவதற்கு மத்திய அரசு சட்டப்பூர்வமாக அனுமதி அளித்துள்ளதாக மத்திய சாலைபோக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

நாக்பூரில் நேற்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர், எத்தனால் எரிபொருளைப் பயன்படுத்துவதன் மூலம், எரிபொருள் இறக்குமதிக்காக நாம் செலவிடும் 22 லட்சம் கோடி ரூபாய் மிச்சமாகும் என்று கூறினார்.

ஏற்கனவே மாருதி சுஸுகி நிறுவனம் 100 சதவீத எத்தனாலில் ஓடும் காரை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும், இதே போல் எத்தனாலில் இயங்கும் இருசக்கர வாகனங்களும் சந்தைக்கு வந்துவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த இரண்டு மாதங்களில் மேலும் சில கார் நிறுவனங்கள் எத்தனாலில் இயங்கும் வாகனங்களை அறிமுகப்படுத்தத் தயாராகி வருவதாகவும் திரு கட்கரி மேலும் கூறினார்.

<<<<<<>>>>>>

அரசு மருத்துவமனைகளை மேம்படுத்த மாநில அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவ, மாணவியருக்குப் பட்டங்களை வழங்கி அவர் பேசினார்.

மாநிலம் முழுவதும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தரமான மருத்துவச் சேவைகள் கிடைப்பதை அரசு உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

மருத்துவம் என்பது புனிதமான தொழில் என்றும் அதனை வணிகமாகப் பார்க்காமல், ஏழை, எளிய மக்களுக்குச் சேவை செய்யும் மனப்பான்மையுடன் இளம் மருத்துவர்கள் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அரசு மருத்துவமனைகளில் கூட்ட நெரிசலைக் குறைக்கவும், நீண்ட நேரம் காத்திருப்பதைத் தவிர்க்கவும், ஆன்லைன் மூலம் மருத்துவர்களைச் சந்திப்பதற்கான முறையை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நீட் தேர்வு அவசியமில்லை என்பதே தவெக அரசின் கொள்கை என்றும், ஒரே நாடு - ஒரே தேர்வு முறை, மாநில உரிமைகளுக்கு எதிரானது என்றும் திரு. அருண்ராஜ் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் அனைத்து விதமான ஆவின் பால் வகைகளும் தட்டுப்பாடின்றி நுகர்வோருக்கு வழங்கப்பட்டு வருவதாக மாநில பால்வளத்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நுகர்வோரின் தேவைகளை ஆவின் நிறுவனம் பூர்த்தி செய்துவருவதாக தெரிவித்தார்.

குறிப்பாக, நீல நிறம் மற்றும் பச்சை நிற பாக்கெட் பால் உள்ளிட்ட அனைத்து வகைகளும் போதிய அளவில் விநியோகிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

***(Sound Byte — அமைச்சர் - 18 Sec. )***

<<<<<<>>>>>>

சேலத்தில் **50**-க்கும் மேற்பட்ட பெண்களுக்கு நிகழ்ந்த பாலியல் வன்கொடுமை தொடர்பாக, சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் மாநில செயலாளர் திரு சண்முகம் விடுத்துள்ள அறிக்கையில், இந்த சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள போதிலும், மேலும் பலருக்கு இதில் தொடர்பு இருக்கலாம் என்பதால் குற்றவாளிகள் அனைவரையும் கைது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளர்.

<<<<<<>>>>>>

வளி மண்டல சுழற்சி காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில், இன்று, இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை ஆகிய பத்து மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

*இருவரிச் செய்திகள்*

வேளாண் துறையில் ஒத்துழைத்து செயல்படுவது தொடர்பாக, இந்தியாவும் — ரஷ்யாவும் தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகின்றன.

-----------

மியான்மரில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவையில் மூன்று புள்ளி எட்டாக பதிவாகியுள்ளது.

-----------

திரிபுரா மாநிலத்தையொட்டியுள்ள பங்களாதேஷ் எல்லையில், அத்துமீறி நுழைய முயன்ற பங்களாதேஷ் நாட்டை சேர்ந்த ஒருவரை, எல்லை பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொன்றனர்.

-----------------

சர்வதேச அளவில் விமான போக்குவரத்து பயணிகளின் எண்ணிக்கையில் இரண்டு சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளதாக சர்வதேச விமான போக்குவரத்து சங்கம் தெரிவித்துள்ளது.

-----------------

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் **30** கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மலைப்பாதை அமைக்கும் பணிகளை

தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு குமார் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

-----------------

தூத்துக்குடி நகரில் மாதாந்திர மின் பராமரிப்புப் பணி நடைபெற உள்ளதால் நாளை மறுநாள் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படும் என்று மாநகராட்சி ஆணையர் அறிவித்துள்ளார்.

-----------------

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகளை ஆட்சியர் திரு ரவிகுமார் நேற்று ஆய்வு செய்தார்.

-----------------

மதுரையில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை தொடங்கப்பட்டு இரண்டு நாட்களில் சிறப்பாக செயல்பட்ட காவலர்களுக்கு மாநகர காவல் ஆணையர் திரு கபில்குமார் சரத்கார், சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

----------------

சென்னை மடிப்பாக்கம் பகுதியில் வலி நிவாரண மாத்திரைகளை விற்பனைக்காக வைத்திருந்ததாக ஐந்து பேரை காவல்துறையினர் கைது

செய்து அவர்களிடமிருந்து **2** ஆயிரத்து **40** மாத்திரைகளை பறிமுதல் செய்தனர்.

----------------

சென்னை அரும்பாக்கம் பகுதியில் ஏ டி எம் இயந்திரத்தை உடைத்து கொள்ளையடிக்க முயன்ற ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா **7** விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

தரம்சாலாவில் நேற்று நடைபெற்ற இப்போட்டி மழை காரணமாக **25** ஓவராக குறைக்கப்பட்டது.

அதன்படி, முதலில் விளையாடிய ஆப்கானிஸ்தான் **24** புள்ளி ஐந்து ஓவரில், **194** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**195** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்தியா **22** புள்ளி ஐந்து ஓவரில், **3** விக்கெட் இழப்பிற்கு **195** ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இரு அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி வரும் புதன்கிழமை லக்னோவில் நடைபெறவுள்ளது.

--------------------

உலகக்கோப்பை கால்பந்து போட்டியின் மூன்றாவது நாளான நேற்று, சான்பிரான்சிஸ்கோவில் **'B'** பிரிவுப் போட்டியில், கத்தார் - சுவிட்சர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

சுவிட்சர்லாந்து அணி ஒரு கோல் அடித்து முன்னிலையில் இருந்தது.

இருப்பினும், ஆட்டத்தின் இறுதி நேரத்தில் கத்தார் அணி ஒரு கோல் அடித்து ஆட்டத்தைச் சமன் செய்தது.

இதனால், இரு அணிகளுக்கும் இடையிலான இந்தப் போட்டி டிராவில் முடிவடைந்தது.

**<<<<<<END>>>>>>**